# விடுதலைப்புலிகள், புளொட், ஈ. தே. விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் டில்லிக்குச் சென்றனர்

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 13-7-86 ஞாயிறு ஆனி 29 இலக் 1 முழுக்கம் 59

(சென்னை)

இந்திய மத்திய அரசின் அழைப்பையேற்று சென்னையிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் நேற்றுக் காலை டில்லிக்குச் சென்றூர்கள் இவர்கள் இங்கு வெளி விவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவர். ஈழம் தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள் டில்லி சென்றுள்ளதாக சென்னையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. மத்திய இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரத்தை இக் குழுக்களின் தலைவர்கள் நேற்று முன்தினமிரவு சந்தித்துப் பேசியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாரத அரசின் கொள்கைக்குழுத் தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, பாரத வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரையும் சந்தித்து இன்று பேசுவர். இலங்கை அரசின் புதிய மாகாண சபை யோசனைகளை தாம் முற்றாக நிராகரித்து விட்டதாக தமிழீழ விடுதலைப் போராளிகள் குழுக்கள் ஏற்கனவே தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனிடம் தெரிவித்தது தெரிந்ததே.

## இன்று காலை ஜனாதிபதி கூட்டணி பேச்சுவார்த்தை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள் குழு ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இன்று காலை சந்தித்துப் பேசவுள்ளது. இச்சந்திப்பு நாளை திங்கட் கிழமை காலையே இடம்பெறுவதாக இருந்தபோதிலும், இறுதி நேரத்தில் இது முன்போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை பத்து மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத் தில் இச்சந்திப்பு நடைபெறும் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவ சிதம்பரம், இரா. சம்பந்தன், வி. யோகேஸ்வரன், வி. ஆனந்தசங்கரி, டாக் டர் நீலன் திருச்செல்வம், பி. சூசைதாசன் ஆகியோர் கூட்டணிக் குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்கள் அனைவரும் முன்னுள் எம். பீக்களாவர். மட்டக்களப்பிலிருந்து திரு. சம்பந்தமூர்த்தி இன்று காலை கொழும்பு செல்வாராஞல் அவரும் இக்குழுவில் இடம்பெறுவார். ஜனாதிபதியுடன் இன்று நடத்தப்படும் பேச்சுவார்த்தையை அடுத்தே இது தொடருமா இல்லையா என்று முடிவெடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

# மாகாணசபையை ஏற்கவில்லை

# போராளிகளுடன் இணைந்ததாகவே முடிவு எடுப்போம்!

## அமிர் 'ஈழமுரசு'வுக்கு பேட்டி

(கொழும்பு)

"ஜனாதிபதி ஜயவர்த்தன முன்வைத்துள்ள மாகாண சபை
யோசனையை கூட்டணி ஏற்கவில்லை; இதற்கான மாற்றுயோசனை எதனை
யும் சமர்ப்பிக்கும் நோக்கமும் கூட்டணிக்கு இல்லை; இது தொடர்
பான எந்த முடிவுக்கும் நாம் இன்னமும் வரவுமில்லை" என்று
கொழும்பு வந்துள்ள கூட்டணிக் குழுத்தலைவர் திரு. அ. அமிர்தலிங்
கம் 'ஈழமுரசு'வுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பித்த மாவட்டசபை யோசனையிலும் பார்க்க மாகாண சபை யோசனையை சிறிது முன்னேற்றமானது என்று மட்டுமே சொல்லலாம் என்றும் சொன்ன திரு. அமிர்தலிங்கம், இந்தியாவின் தீவிர முயற்சி தான் இதற்குக்காரணம் எனவும் குறிப்பிட்டார்.

ஆனாலும் இதனை ஏற்கவேண்டுமென்று இந்திய அரசு தங்களைக் கட்டாயப்படுத்தவில்லை எனவும் அவர் சொன்னார்.

நேரடியாகவோ, அல்லது வேறுவிதமாகவோ தமிழீழ விடுதலைப் போராளிகள் அமைப்புகளுடன் இலங்கை அரசாங்கம் தனது புது யோசனைகள் பற்றிப் பேசவேண்டியது அவசியமெனவும் திரு. அமிர்தலிங்கம் வலியுறுத்திக் கூறினர்.

கூட்டணி இதுவிடயமாக எடுக்கும் எந்த முடிவும் விடுதலைப் போராளி இயக்கங்களுடன் இணைந்ததானதாகவே இருக்குமென்றும் அவர் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொன்னர்.

—6ஆம் பக்கம் பார்க்க

## அமிர் தலைமை கூட்டணிக்குழு நேற்று கொழும்பு வந்தது

(கொழும்பு)

கூட்டணியின் உயர்மட்டக் குழுவொன்று நேற்றுக்காலை "இந்தியன் எயர்லைன்ஸ்" விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் திரு. மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன், வி. யோகேஸ்வரன், வி ஆனந்தசங்கரி ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஈழமுரசு நேற்று அறிவித்தபடி முன்னுள் மூதூர் எம் பி. திரு. அ தங்கத்துரை கடைசி நிமிடத்தில் குழுவிலிருந்து வில

...6ஆம் பக்கம் பார்க்க

## டிக்ஸிற்றுடன் கூட்டணியினர் பேசினர்

கொழும்பு வந்திருக்கும் கூட்டணித் தலைவர்கள் நேற்றுப் பிற்பகல் இந்தியத் தூதுவர் திரு. ஜே என். டிக்ஸிற்றை இந்தியா ஹவுஸில் சந்தித்துப் பேசினுர்கள். இச்சந்திப்பு மரியாதை பூர்வமானதாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று நடைபெறும்

## ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 5 இயக்கமும் பங்குபற்றும்

மாகாணசபை யோசனையையும், கொழும்பில் நடைபெறும் அரசியல் கட்சிகளின் கூட்டத்தையும் எதிர்த்து இன்று நடைபெறும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தமிழீழ விடுதலைப் போராளி இயக்கங்களும் பங்குபற்றுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈரோஸ், புளொட், தமிழீழ விடுதலை இராணுவம் ஆகிய ஐந்து இயக்கங்களும் இதில் கலந்துகொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதனுமடம் சந்தியிலிருந்து இன்று காலை ஒன்பதரை மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் வரை சென்று அங்கு நடைபெறும் கூட்டத்துடன் முடிவடையும். பல்வேறு இயக்கப் பிரதிநிதிகளும் இங்கு உரையாற்றுவர்.

## இயக்கச்சியில் 'ஹெலி' சுட்டு 2 பேர் பலி; 8 பேர் காயம்!

(வண்ணுர்பண்ணை)

இயக்கச்சியிலுள்ள வண்ணன்குளப் பகுதியில் ட்ராக்டர் ஒன்றில் பயணஞ்செய்து கொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகப்டரிலிருந்து நேற்று நண்பகல் ஒரு மணித்தியாலமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதனுல் இருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமடைந்ததுடன், ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பிரயாணிகளுடன் மேற்படி ட்ராக்டர் வந்து கொண்டிருந்தபோதே ஹெலிகாப்டர் தாழப்பறந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

இச்சந்தர்ப்பத்தில் ட்ராக்டரில் பயணஞ்செய்துகொண்டி

—6ஆம் பக்கம் பார்க்க

சிவசிதம்பரம் சொல்கிறர்:

## திறந்த மனதுடன் பேசவே நாங்கள் வந்துள்ளோம்

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தமிழர் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பேசுவதற்கு திறந்த மனத்துடன் தாங்கள் வந்திருப்பதாக கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் நேற்றுத் தெரிவித்தார்.

"மாகாணசபை யோசனை தமிழ் மக்களின் தேவைகளை, அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை. ஆனாலும் அரசாங்கம் முன்னர் சமர்ப்பித்த ஆலோசனைகளிலும் பார்க்க இப்போது சமர்ப்பித்த மாகாண சபையில் சிறிது முன்னேற்

- 6ஆம் பக்கம் பார்க்க

றீகனிடமிருந்து ஜெயவர்த்தனவுக்கு கடிதம்:

## இது நல்ல சந்தர்ப்பம்; சரியாக பயன்படுத்தி தீர்வு காணுங்கள்!

(கொழும்பு)

இப்போது கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளும் நல்ல தீர்வைக் காணுமாறு அமெரிக்க ஜனாதிபதி றீகன் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ள ஜனாதிபதி றீகன், இந்த நல்லெண்ணத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி சுமுகமான அரசியல் தீர்வைக் காணுமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் கேட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாதென்றும், அரசியல் தீர்வே காணப்படவேண்டுமென்றும் இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து

யாழ். மானிப்பாய் வீதி, பஷீர் சுல்பா தம்பதியின் மகன் றிஸ்கான் இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

க. இராசரத்தினம், இ. பூமகள் ஆகிய இருவரினதும் அடையாள அட்டையும், ஒரு பென்ஷன் காட்டும் கிளிநொச்சியிலிருந்து பூநகரிக்கு வந்த வேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூநகரித்துறை ஊழியரிடம் ஒப்படைத்தால் நன்றியுடன் சன்மானமும் வழங்க காத்திருக்கிறேன். இராசரத்தினம், இறங்குதுறை, பூநகரி. R/24041

## நாளைய நிகழ்ச்சி

(காரைநகர்)

காரைநகர் தந்த வானியல் மேதை அல்லின் ஆபிரகாம் அம்பலவாணர் F. R. A. S நினைவு ஸ்தூபி அடிக்கல் நாட்டு விழா நாளை திங்கட்கிழமை காலை நடைபெறும். திரு வி. டி. அம்பலம் அடிக்கல்லினை நாட்டி வைப்பார்.

## கிளிநொச்சி மாணவருக்கு வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகாமுக்கு மிக அருகாமையிலுள்ள கனிஷ்ட வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களில் இவ்வருடம் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் தோற்றவிருக்கும் அனைவரையும் நாளை 14-ம் திகதி 7-ம் வாய்க்கால் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் வந்து சந்திக்குமாறு கனிஷ்ட வித்தியாலய அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கனிஷ்ட வித்தியாலயம், மகா வித்தியாலயம், புனித திரேசா மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றோடு கனகபுரம் மகா வித்தியாலயமும் தொடர்ந்து இயங்க முடியாத நிலையிலேயே உள்ளன.

## ஆசிரியர்கள் தங்க வசதி

(வேலணை)

வேலணை கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி வசதியும், உணவு போக்குவரத்து வசதிகளும் வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி பண்டிதர் பொன். கணேசன் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வெளியூர் ஆசிரியர்கள் நூறுபேர் தங்குவதற்காக வேலணை சேர் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலய விடுதியில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாசிரியர்கள் அராலித் துறையூடாக இங்கு வந்து போவதற்கு திங்கட்கிழமை காலையும், வெள்ளிக்கிழமை மாலையும் தனியார் போக்குவரத்து பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## உதவி

(குருநகர்)

மண்டைதீவுக் கடலில் வைத்துக் கொல்லப்பட்ட குருநகர் மீனவர்கள் முப்பத்தொருபேர்களது குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்க அராலி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம் பத்துமூடை அரிசியும், பதினைந்து கிலோ பருப்பும் முப்பத்தோராம் நினைவு நாளன்று குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தில் கையளித்துள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## ஈராண்டுப் பகுதி நேரக்கல்விப் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி 1986/1987

## புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரிய சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 செலுத்தியபின் கல்விக்கிளைச் சிரேட்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 10.08.1986 ஆகும். தேர்வுநாடிகள் 31 08 1986 இல், 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்றவேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி: 10.07.1986.

B/1412

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி கமலா கிருஷ்ணமூர்த்தி

(வீணை ஆசிரியை)

பிறப்பு:- 22-7-1922 மறைவு:- 13-6-1986

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
பண்பாலும் அன்பாலும் எம்
உள்ளத்தில் என்றும் அணையா
விளக்கேற்றி இறைபதம் எய்திய
எங்கள் அன்பு உருவத்திற்கு
பொன் வைத்துப் போற்றுவிடினும்
பூவைத்து என்றும் போற்றுவோம்

லண்டனில் காலமான திருமதி
கமலா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மறைவு
எமக்கும் சங்கீத உலகிற்கும் ஓர் பேரிழப்பாகும்.

அன்பிற்கு உறைவிடமாய், தன்னலம் கருதாது பிறர்நலம் பேணி வாழ்ந்த அன்னாரது இலட்சியங்கள் நிறைவேற நாளெல்லாம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

இவரின் பிரிவால் துன்புறும்,
குஞ்சு குடும்பம்.

R/24010


## கனடா டென்மார்க் சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை பிரச்சினையற்ற முறையில் நேரடியாக பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு தொழில் வாய்ப்புடன் உடன் அனுப்பிவைக்கப்படும். 20ம் திகதிக்கு முன்பாக பாஸ்போட், 6படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு: **N. BALA**

பஸ்வழிஇல.764 பலாலிவீதி. திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

R/24038



## பிரயாண ஒழுங்குகள்
## BAHRAIN VACANCIES

Waitresses/பெண்கள், Hotel Experience and very good knowledge in English.
சம்பளம் 150 US டொலர்

COOK: ஐரோப்பிய இந்திய உணவு தயாரிப்பு அனுபவம்.
சம்பளம்; 180 US டொலர்

Security Guard: 45வயதுக்கு குறைந்தவரும் பொலிஸ் சேவை செய்தவரும். ஆங்கில அறிவு அவசியம்.
சம்பளம்: 160 US டொலர்

எல்லாவற்றிற்கும் இலவச இருப்பிடம், உணவு.
3 புகைப்படம், சான்றிதழ் உடன் நேரடியாக வரவும். 2 கிழமைக்குள் பிரயாணம்.

சாந்தி தியேட்டர் முன்பாக
90, கந்தப்பசேகரம் ரோட்,
யாழ்ப்பாணம்.

துசிற்றா

R/24039


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## முழுநேரக் கல்விப்பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி 1986/1987

## புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரிய சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக் கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களை ரூபா. 10/- செலுத்திய பின் கல்விக்கிளைச் சிரேட்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 10.08.1986 ஆகும். தேர்வுநாடிகள் 31 08.1986 இல், 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல்வேண்டும்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும், அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்றவேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி: 10.07.1986.

B/1412

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## நல்லூர் திருவிழா சந்தை-1986
## கேள்வி அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாக்கால தற்காலிக சந்தைகளில் (1) நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையில் 2) யாழ். மாநகராட்சிமன்ற தீ அணைக்கும் படை அலுவலக கிழக்குப் பக்க காணியில் கடைகளுக்கான நிலம், ஐஸ்கிறீம் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் ஆகியன வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 31 . 07 . 86ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணி வரை யாழ் மாநகராட்சிமன்ற ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ. 25/-ம், மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பிணைப் பணமாக ரூ. 100/-ம் செலுத்துவதின் பேரில் 30 . 07 . 86ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை யாழ். மாநகராட்சிமன்ற சிறும்பியடி அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை 31.07.86ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் யாழ். மாநகராட்சிமன்ற இந்துவிடுதி அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளருக்கு அனுபப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ். மாநகராட்சி மன்ற சிறும்பியடி அலுவலகத்தின் நானுவித வருமானப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்ற அலுவலகம், யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்.
11.07.86

B/1414

# ஜனாதிபதியின் புதிய "மாகாண சபைகள்" யோசனை

## திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சியா?

இனப் பிரச்சினையை, அரசியல் ரீதியாக, பேச்சுவார்த்தை மூலமாகவும் உடன்படிக்கை வாயிலாகவும் தீர்ப்பதற்கென அதி உத்தம ஜனாதிபதி அவர்கள் சில திட்டங்களை அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படையில் மக்கள் முன்னும், தமிழீழப் விடுதலைப் போராளிகள் முன்னும், ஏன் உலகத்தின் கண்ணோட்டத்திற்காகவும் சென்ற மாதப் பிற்பகுதியில் சமர்ப்பித்துள்ளார். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பங்குபற்றாத அரசியல் கட்சிகள் மகாநாட்டில் சமர்ப்பித்த யோசனைகளின் பின் ஜனாதிபதி அவர்கள் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் கூட தான் சமர்ப்பித்த திட்டங்களையும், யோசனைகளையும் சில தகுந்த மாற்றங்களோடு, தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டாலென்ன, ஏற்காவிட்டாலென்ன அவற்றை அமுலாக்கியே தீருவேன் என வலியுறுத்திக் கூறியுள்ளார். மேலும் ஒற்றையாட்சியின் கீழ், தனி மாகாண நிர்வாகங்கள் என்பவற்றின் உறுதியான அமைப்பிற்குள் நடைமுறைப்படுத்தக் கூடிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ ஆலோசனைகளை தன்னால் ஏற்க முடியுமெனவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள திட்டங்களையும், பத்திரிகையாளர் மகாநாட்டில் கொடுத்த விளக்கங்களையும் ஆராயும்பொழுது மக்களின் உடன்பாடோ அல்லது அவர்களின் நிராகரிப்போ அர்த்தமற்றது என்றே கூற வேண்டியுள்ளது. இவ்வித

### 1. பாதுகாப்பு

மாகாண காவல்படையானது தேசிய காவற்படைக்கு கட்டுப்பட்டதாகவே அமையும். ஏனெனில்,

அ) மாகாண காவல்படையின் தலைவர் தேசிய காவல் படையின் தலைவரால் நியமிக்கப்படுவார்.

ஆ) மாகாண காவல்படை அதிகாரிகள் பதவியுயர்வு மூலம் தேசிய காவல்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இ) மாகாண காவல்படையினர் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் மேல்முறையீடுகளை; தேசிய காவல்படை பரிசீலனை செய்வதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளமை.

ஈ) மாகாண காவற்படைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் யாவரும் தேசிய ஆணைக் குழுவினால் தெரிவு செய்யப்படுவதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளமை. இவ் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் மூவருள் இருவரை மத்திய அரசாங்கத்தால் நியமிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது மாகாணங்களில் நடைபெறும் குற்றவியல் செயல்களைத் தடை செய்வதும், கண்டுபிடிப்பதும், தேசிய காவற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாகாண காவல்படையினருக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் மட்டுமே கொடுக்கப்படும். ஜனாதிபதி

மிருந்து குறைந்த பட்சம் எவ்வளவு நிதியைப் பெற வேண்டுமென்று வரையறை செய்யப்படவில்லை. இப்பொழுதுள்ள அபிவிருத்திச்சபைகளைப்போல மாகாணங்களும் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும். அச் சந்தர்ப்பத்தில் இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் கேலிக்குரியனவாயமையும்.

மத்திய அரசாங்கத்தினுடைய அனுசரணையின்றி, மாகாணசபைகள் வெளிநாட்டுக் கடன்களையோ, மானியங்களையோ அல்லது வர்த்தக ரீதியிலான கடன்களையோ, தனியார் முதலீடுகளையோ பெறமுடியாது மரபு வழியாக சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் நிலவிவரும் பகைமை உறவுகளைக்கொண்ட சூழ்நிலையில் இக்கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி மாகாண அபிவிருத்தியைக் கட்டுப்படுத்த முடியும். காணி, காணிக் குடியேற்றம் என்பவற்றின் மீதுமாகாணசபைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் மிகக் குறைந்தனவாகும் அரசுஉடைமையான காணிகளெல்லாம் மத்திய அரசாங்கத்திடமே விடப்படுகின்றன. ஜனாதிபதியே அத்தகைய காணிகளை

ளான தெருக்கள், நெடுஞ்சாலைகள், சந்தைகள், பொது நிறுவனங்கள், போக்குவரத்து, நில நீர்வளங்கள், பாரிய நீர்பாசன திட்டங்கள், உலோகப் பொருட்கள், கனிப்பொருட்கள் சுரங்கங்கள், கரையோர கப்பல் போக்குவரத்து. மீன்பிடி துறைமுகங்கள், கட்டிடவியல் போன்றவை மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழேயே அமைகின்றது.

சமுதாய முன்னேற்றத்துக்கு அடிப்படையான வங்கிகள், காப்புறுதி ஸ்தாபனங்கள், மருத்துவ மனைகள், கல்லூரிகள் சமூகநலநிறுவனங்கள், முதலியனவும் அவ்வாறே அமையும். ஆராய்ச்சி, பயிரினங்களின் இறக்குமதி, அரசாங்க பண்ணைகளின் நிர்வாகம், பண்ணைக் கல்லூரிகள், ஆகியவற்றின் மீதான மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் விவசாய துறையில் மாகாணங்களின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும். விதைகளின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தியமையால் வட பகுதியில் 1978 ம் ஆண்டின் பின் உருளைகிழங்கு செய்கை சீரழிந்தது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. மாகாணங்களின் கைத்

யோகம் என்பவற்றில் பாரபட்சத்திற்கெதிரான நிவாரணங்கள் எதுவும் புதிய யோசனைகளில் இடம்பெறவில்லை. திறமையினடிப்படையில் பொது நிர்வாக சேவை, பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிற்கான தெரிவுகள் நடைபெறுமென்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இவற்றிலே காணப்படவில்லை. அத்துடன் தமிழ் மொழியினை ஒரு உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் காணப்படவில்லை.

சட்டவாக்கம், கொள்கை வகுப்பு ஆகியவற்றில் மாகாணங்களுக்கு மிகக் குறைவான அதிகாரங்களை அளிக்கும் நோக்குடனே இப்புதிய யோசனைகள் உருவாக்கப்பட்டுள்ளனவென்று இதுவரை கவனித்தவற்றால் நன்கு புலனாகின்றது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை பரவலாக்கும் அடிப்படையில் அமைந்த பழைய யோசனைகளின் விரிவாக்கமாகவே இவை அமைகின்றன. மாகாணங்களுக்கு மாகாண அதிபர்களை நியமிக்கும் யோசனையானது நிறைவேற்று அதிகாரத்தைப் பரவலாக்கும் தன்மையுடையதாகும். அது பிரித்தானியர் கால மாகாண நிர்வாக முறையை ஒத்த ஒன்றாகும். தமிழ் மக்கள் இவற்றை ஏற்றாலென்ன, நிராகரித்தாலென்ன தாம் அவற்றை தகுந்த மாற்றங்களுடன் அமுலாக்கப் போவதாக ஜனாதிபதி பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவோ இடை நிறுத்தவோ உத்தேசிக்கப்படாததனாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயுதப் படைகளை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாததனாலும் தமிழ் குடிமக்கள் மீதான போரினை தற்காலிகமாக வேனும் நிறுத்துவதற்கு எதுவித திட்டமுமில்லாமையினாலும் இந்த யோசனைகளை தேவையேற்படின் இராணுவ பலத்தின் மூலமாக திணிக்கவும் கூடும்.

### ★ கண்ணோட்டம்

## ★ தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளைத் தானும் நிறைவேற்றமுடியவில்லையே!

மனப்பான்மையுடன் செயற்படுத்தும் தீர்வானது தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் எதையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படுமாவென்பது கேள்விக்குரிய தொன்றாகும். உதாரணமாக கீழே தரப்படும் விடயங்கள் சம்பந்தமான தமிழ் மக்களின் அபிலாஷைகள் எந்த அளவிற்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென ஆராய்வது அவசியம்.

(1) தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் உள்ள உயிர்களினதும், உடமைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

(2) பொருளியல் சுயாட்சி

(3) அரசியல் சுயநிர்ணயம்

(4) சம உரிமைகளும் அந்தஸ்தும்

ஒற்றையாட்சி அமைப்பில் ஒரு மாகாணத்திற்கு மிகக் கூடுதலான அதிகாரப் பரவலாக்கம் ஏற்படுமாயினும் இக்குறிக்கோளை அடைவதற்கான வாய்ப்புகள் குறைவானதாகவே இருக்கும். ஒற்றையாட்சி அமைப்பில் மிகக் கூடுதலான சுயாட்சி வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொண்டாலும், அவரால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் யாவும் மிகக் குறைந்தளவு சுயாட்சியையே ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது. அவை யாவும் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியனவாகக் காணப்படவில்லை. உதாரணமாக:-

அவசியமெனக் கருதுமிடத்து எந்தவொரு மாகாணத்திலோ அல்லது மாகாணங்களிலோ அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தவும், தேசியகாவல் படையை அனுப்புவதற்கும், ஆயுதப் படைகளை சேவையில் ஈடுபடுத்தவும் அதிகாரமுண்டு. இன ஒழிப்பிலீடுபடும் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இத்தகைய அதிகாரங்கள் கொடுப்பது மிகப் பயங்கரமான செயலாகும்.

குறிப்பு: திறமை அடிப்படையில் தானும் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் இனவிகிதாசாரப்படி தானும் தேசிய பாதுகாப்புப் படையில் தமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களும், இனக் கலப்பை ஏற்படுத்துகின்ற குடியேற்றத் திட்டங்களும், சிங்கள குடியேற்றங்களுமே, அரசாங்கத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களை விரட்டியடிப்பதும், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைகின்றது.

### 2. பொருளியல் சுயாட்சி

நிதி சம்பந்தமான அதிகாரங்களின் தன்மையினால் ஒரு மாகாணத்தின் சுயாட்சி கட்டுப்படுத்தப்படுகின்றது. அரசியலமைப்பில் உறுதியான நிலைப்பாடு இல்லாவிடின் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற உத்தேச நிதி ஆணைக்குழுவானது மாகாணங்களுக்கிடையில் பாரபட்சமான முறையில் செயற்பட முடியும். ஒவ்வொரு மாகாணமும் மத்திய அரசிட

வழங்கலாம், காணிக்கொள்கை ஒரு தேசிய காணி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும். வழங்கப்படும் காணிகளின் அளவும், அவற்றிற்கான இன விகிதாசாரமும் அக்குழுவினாலேயே நிர்ணயிக்கப்படும். இரு மாகாணங்களுக்கிடையிலான பொதுவாகவுள்ள நீர்ப்பாசனத்திட்டங்கள் மீதும். அவற்றோடு தொடர்புடைய காணிப்பங்கீட்டாலும் மத்திய அரசாங்கம் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருக்கும். மகாவலித்திட்டமும், 200 ஏக்கருக்கு மேலான நிலத்தைப் பாசனப்படுத்தும் குளங்களும், அவ்வாறே அமையும். எனவே சிறு கிராமியக்குளங்களே மாகாணசபையின் கட்டுப்பாட்டிற்குள் வரும். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் எஞ்சியுள்ள 31,390 காணித் துண்டுகளை சிங்களவருக்கு மட்

தொழில் உற்பத்தியை பொறுத்தவரையில் கைத்தொழில்களை பதிவு செய்யும் அதிகாரங்களை மத்திய அரசாங்கம் வைத்துக் கொள்கிறது. 1970 இன்பின் வடபகுதியிலே கைத்தொழில் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தியதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

மேல்வரும் அம்சங்கள் மாகாண சுயாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையும் பிரதான விடயங்கள் ஆகும்.

அ. ஒரு மாகாண சபையின் அலுவல்கள் சட்டபூர்வமாக நடைபெறவில்லையென்றுதான் கருதுமிடத்து அதனை ஜனாதிபதி கலைப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்.

ஆ. மாகாணங்களில் எல்லைகளை மாற்றுவதற்கு பாராளுமன்றம் அதிகாரம் பெற்றிருக்

## ★ பல கட்டுப்பாடுகளுடன் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல்!

டுமே வழங்குவதற்கு அரசியலமைப்பில் கொண்டுவரப்படும் மாற்றம் உறுதி செய்யும்.

### அரசியற் சுயநிர்ணயம்

மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் கடமைகளும் குறைந்தனவாக உள்ளன. அத்துடன் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்திடமே முக்கிய அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கையளித்துள்ளது. மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் யாவும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கும். பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தேவைக

கும் (உ+ம் கிழக்கு மாகாணத்தை கரையோர பகுதிகளை மட்டும் உள்ளடக்கிய ஒரு சிறு பிரதேசமாக அமைக்கலாம்.)

இ. திருகோணமலை துறைமுகத்தையும் அதன் சுற்றுடல்களையும் மாகாண நிர்வாகத்தில் இருந்து வேறுபடுத்தல். சுற்றுடல் என்பது திருகோணமலை நகரத்தின் ஒரு பகுதியையோ முழுவதையோ உள்ளடக்கியதாக அமையக்கூடும்.

### 4. சம உரிமைகள்

ஒரு ஒற்றையாட்சி அரசானது எல்லாப் பிரஜைகளுக்கும் சம உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். தொழில்வாய்ப்பு உயர்கல்வி, தமிழ்மொழி உப

---

## பிரஜைகள் குழு நிதியுதவி

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் செயற்படுத்தப்படவுள்ள "நடமாடும் வைத்திய சேவைத்திட்டத்திற்கு பருத்தித்துறை பிரஜைகள் குழு 10,000 ரூபாவை வழங்கவுள்ளது.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரினதும், ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களினதும் அனுசரணைகளினதும் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடமாடும் வைத்திய சேவை" திட்டம் இன்றைய காலகட்டத்திலே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதனாலேயே பிரஜைகள் குழு இத்திட்டத்திற்கு 10,000 ரூபாவை வழங்கத் தீர்மானித்ததாக பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் பதில் தலைவர் திரு. எஸ். தேவதாஸன் தெரிவித்தார்.

இந் நடமாடும் வைத்திய சேவைத் திட்டத்திற்கு உதவிகளை வழங்க விரும்புபவர்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கனக லலித்குமாருடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# குருநகர் 31 மீனவருக்கும் மண்டைதீவில் நினைவுஸ்தூபி

மண்டை தீவு தெற்கு கடற் கரையில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப் பட்ட முப்பத்தொரு குருநகர் மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக அதே இடத்தில் மண்டைதீவு மீனவ மக்களால் நினைவு தூபி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந்த நினைவு தூபியை மண்டைதீவு பிரஜைகள் குழு தலைவரும் புனித பேதுருவானவர் தேவாலய பங்கு தந்தையுமான அருட் திரு. யோ. கமிலஸ் விமலன் அடிகள் கடந்த செவ்வாய்கிழமைகாலை ஆயிரக்கணக்கானமக்கள் மத்தியில் திறந்து வைத்தார்.

இவ் வைபவத்திற்கு முன்பாக மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயத்தில் இறந்த மீனவர்களின் ஆத்ம சாந்திக்காக விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்ற பின்பு ஆயிரக்கணக்கான மக்கள் ஊர்வலமாக சென்று நினைவு தூபி அமைந்த இடத்துக்கு சென்றடைந்தனர்.

இவ் ஊர்வலத்தில் இப்பகுதியை சேர்ந்த மூன்று பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் தொகையானோர் கலந்து கொண்டனர்,

மண்டைதீவு புனித பேதுருவானவர் மன்றத்திலிருந்து மண்டைதீவு தெற்கு கடற்கரை வரை வீதிகள் எங்கும் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

சிலுவை ஊர்வலக் கூட்டத்தில் பேச்சு:

# இலங்கை அரசின் இராணுவ அடக்குமுறை தமிழர்கள் பிரச்சினையுடன் நின்றுவிடாது!


"தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு நடக்கும் கொடூரக் கொலைகளையும், துயரங்களையும் சற்றுமே சிந்தியாத தென் இலங்கை ஆயர்சபை யாழ். ஆயர் அவர்களின் கூற்றுக்குத் தாம் ஒப்புதல் தரமுடியாதெனவும், எமது ஆயர் நாக்கை அடக்கிப்பேசவேண்டும் எனவும், பத்திரிகைகள் மூலமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். இலங்கை அரசின் இராணுவ அடக்குமுறை தமிழ் மக்கள் பிரச்சினையுடன் நின்றுவிடாது. பௌத்தம் மாத்திரம் எனத் தென் இலங்கையில்கிளர்ச்சி எழும்பும்போது இதே கறுப்புச்சட்டை, அதிரடிப் படை இராணுவம் உங்கள் மீதும் கட்டாயம் பிரயோகிக்கப்படும். அந்தநாள் வரையும் பொறுத்திருங்கள்!"

இவ்வாறு பண்டத்தரிப்பு பங்கு மக்களின் சிலுவை ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய எஸ். ஏ. செபரத்தினம் குறிப்பிட்டார்.

படுகொலை செய்யப்பட்ட அருட்சகோதரர் வென்சஸ்லோஸ், மற்றும் வடக்கு, கிழக்கில் வாழ் அப்பாவித் தமிழர்கள், சமய குரவர்கள், போராளிகள் ஆகியோருக்கான அஞ்சலி, ஆத்ம சாந்திக்கான இக் கூட்டம் பண்டத்தரிப்பு பாத்திமா அன்னை ஆலய முன்றலில் நடைபெற்றது.

திரு. செபரத்தினம் மேலும் தமது உரையில், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியலாளர் செய்து வரும் அக்கிரமங்களைப் பற்றி, கொடூரக் கொலைகளையிட்டு, எமது மீனவர் சமுதாயம் படும் வேதனைகளையிட்டு, ஆயிரக்கணக்காக அகதிகளாக்கப் பட்ட எம் மக்களையிட்டு கிஞ்சித்தும் அக்கறை காட்டாத, கவலையடையாத, அநுதாபம் காட்டாத எம்மத உயர்பீடம் எமது ஆயர் வண. தியோகுப்பிள்ளை அவர்களின் உரைக்குக் கண்டனக் குரல் கொடுக்க வந்தது எமக்குத் தாங்கொணாத் துயரைத் தருகிறது என்றார் திருவாளர்கள் வி. செல்லத்துரை, ஏ.எஸ். லோறன்ஸ், எஸ். இராசநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்.

# பன்றிக்கோட்டு பிள்ளையார் இன்று குடமுழுக்கு



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ விசுவலிங்க மகா கணபதிப்பிள்ளையார் இன்று குடமுழுக்கு நீராடுகிறார். 21. 06. 1954ம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்திற்குப்பின் இன்று தான் அடுத்த கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

காசிவாசி பிரம்மஸ்ரீ அகிலேச கணேச ஐயர் அவர்கள் சுமார் கி. பி. 1780 ம் ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் குடியேறி பன்றிக்கோட்டு ஸ்ரீ விசுவலிங்க மகா கணபதிப் பிள்ளையார் கோவிலையும், துவாதசி மட புண்ணியத்தையும் ஸ்தாபித்தார்கள் பின்பு முறையே அவர்களின் சந்ததியினரான பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் காசி விசுவநாதர் சண்முக ஐயர், அவர் மகன் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களினால் பரிபாலனஞ் செய்யப் பெற்று வந்தது. தற்பொழுது பன்னிருவர் கொண்ட ஓர் தர்மகத்தா சபையினரால் மேற்படி ஆலயம் சென்ற ஆவணி மாதம் பாலஸ்தாபனம் செய்யப் பெற்று தென்னிந்திய சிற்பக் கலைஞர்களினால் உருவாக்கப் பெற்ற சுந்தர விமானம் அழகாகக் காட்சியளிக்கின்றது. மேற்படி சபையாரின் அயராமுயற்சினாலும், அடியார்களின் நிதி உதவியினாலும் மகா மண்டபமும் சிற்ப முறையில் அமைக்கப் பெற்று இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் என்று அழைப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று;

## கர்ணபரம்பரைக் கதை

ஆதிகாலத்தில் இவ்விடம் சிறு பற்றைக்காடுகள் இருந்ததாகவும் அருகே பிரப்பங்குளமும், வரகு தோட்டங்களும் இருந்ததாகவும், இவ்விடத்தில் பன்றிகள் அதிகமாக வசித்துவந்ததாகவும், காங்கேயன் துறைவீதி அந்நேரம் மணல் றோட்டாக இருந்ததாகவும், இரவில் சிறுகாட்டுக்குள் வெளிச்சம் தெரிந்ததாகவும் இதை இவ்வூர் மக்கள் கண்டும் இதுபற்றி அறியமுடியாதிருந்ததாகவும், ஒரு நாள் இவ் அயலில் உள்ள அந்தணர் ஒருவரின் கனவில் விநாயகப்பெருமான் ஓர் முதியவர் போல் தோன்றி "நான் உன்னருகில் இருக்கின்றேன்! நீ ஏன் திரும்பிப் பாராமல் இருக்கின்றாய்!" எனக் கேட்டதாகவும், அவ்வமயம் அவ்வந்தணர் எங்கே என்று வினவ நாளைக்கு வந்து பார் "பன்றிகள் கூட்டமாக நிற்கும் இடத்தில் நான் இருப்பேன்" என்று கூறி மறைந்ததாகவும், மறுநாள் காலை அவ்வந்தணப் பெரியார் எழுந்து, நித்திய கருமம் முடித்து அவ்விடத்தைத் தேடிச் செல்ல அங்கே பன்றிகள் கூட்டமாக நின்றதாகவும், இவரைக் கண்டதும் பன்றிகள் விலக அவ்விடத்தில் விநாயகப் பெருமான் இருந்ததைக்கண்டு அந்தணப் பெரியார் மெய்சிலிர்த்து, ஆனந்தப்பரவசத்தில் மூழ்கி இவ்விடத்திலேயே விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வந்ததாகவும் ஆதலால்தான் பன்றி+கோட்டு (கோட்டு=நிலம்)பன்றிகள்கூட்டமாக நின்ற இடம் பன்றிக் கோட்டுப் பிள்ளையார் என்ற பெயர் வந்ததாக முன்னோர் வாயிலாக அறிகின்றோம். இவ்விடத்தில் உள்ள பல காணிகளுக்கு பன்றிக் கோட்டு வளவு என்ற பெயர் இருப்பதைக் காணலாம்

போர்த்துக்கேயர் ஆட்சியில் 16ம் நூற்றாண்டளவில் பல சைவக்கோவில்களை பறங்கியர் இடித்த நேரத்தில் இங்கேயும் பிள்ளையார் இருப்பதாகக் கேள்விப்பட்டு பிள்ளையாரைத் தூக்க போர்த்துக்கேயன் ஒருவன் வந்ததாகவும், இவனின் வருகையை முன்னரே அறிந்திருந்த அர்ச்சகர் வைக்கோல் போர் மூடும் பனை ஓலைக் குடிலை எடுத்து பிள்ளையாரை மூடி மறைத்து வைத்துவிட்டு காவல் நின்றதாகவும், அங்கே வந்த போர்த்துக்கேயன் காவலுக்கு நின்ற அந்தணரை நோக்கி பிள்ளையார் எங்கே என்று வினவ பிள்ளையார் இங்கே இல்லை என்று அந்தணப் பெரியார் கூறியதாகவும், பனையோலைக் குடிலால் மூடியிருப்பதைக் காட்டி என்ன என்று கேட்க அர்ச்சகரானவர் அதற்குள் பன்றி குட்டி போட்டுள்ளது என்று சொன்னதாகவும், அதை நம்பாத போர்த்துக்கேயன் அங்கே சென்று பனையோலைக் குடிலைத் திறந்து பார்த்த பொழுது அதற்குள் பன்றியும் குட்டிகளும் இருப்பதைக் கண்டு ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டதாகவும் இவ்வற்புதத்தைக் கண்ட அந்தப் பெரியார் செய்வதறியாது திருவருளில் திளைத்ததாகவும் இதனால் தான் பன்றிக்குட்டிப் பிள்ளையார் என்று இன்றும் அடியவர்களால் அழைக்கப்படுவதாக முன்னோர் வாயிலாக அறிகிறோம்.

இவ்வாலயத்திலே இலங்கையில் எங்கும் காண முடியாதவாறு விநாயக புராணத்தில் கூறப்படுவது போல விநாயகப் பெருமான் இருமருங்கும் இரு தேவியர்கள் சூழ சித்தி-புத்தி சமேதரராக எழுந்தருளி இருக்கின்ற காட்சி முக்கிய சிறப்பம்சமாக உள்ளது. இவ்விக்கிரகங்கள் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப் பெற்றது. காசியில் இருந்து கொண்டு வரப்பெற்ற சிவலிங்கம் ஒன்றும் இங்கு பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளது.

## தர்மம் (துவாதசிமடம்)

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்" என்ற சேக்கிழார் நாயனாரின் கூற்றுக்கமைய மகேசுவர பூசை ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெறவேண்டும். பிராமண போசனம் நடைபெற வேண்டும் என்பதற்காக இவ்வாலயத்திற்குத் தெற்கே 'துவாதசி மடத்தை அமைத்து அதில் ஒவ்வொரு மாதமும் வரும் பூர்வபக்கத் துவாதசித் திதியில் சிவபூசை

# சுவிசேஷ மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதி

வடமாநில கல்வித்திணைக்களத்தில் நிதி உதவியாளராக கடமையாற்றும் திரு. எஸ். துரைசிங்கம் நெதர்லாந்து நாட்டில் நடைபெறவிருக்கும் உலக சுவிசேஷ மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகப் பங்குபற்றவிருக்கிறார். பிரபல



சுவிசேஷக அருட்திரு. பில்லி கிராம் அவர்களின் ஆதரவில் மேற்படி மகாநாடு நடைபெறவிருக்கிறது. "அம்ஸ்ரடாம் 86" என்று பெயர்பெறும். இம்மகாநாட்டில் உலகின் பல பாகங்களிலிருந்தும் எண்ணாயிரம் சுவிசேஷ ஊழியர்கள் கலந்துகொள்கிறார்கள்.

யாழ் நல்லூர்பரி யாக்கோபு ஆலயத்தின் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபாடு கொண்டுழைத்து வரும் இவர் ஆலய பாதுகாவலர் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். கல்வித் திணைக்களத்தில் கலாச்சாரச் செயலாளராகவிருந்து பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தியதுடன், கடந்த வருடம் ஒளிவிழாவையும் மிகச் சிறப்பாக நடாத்தி பலரது பாராட்டையும் பெற்றார். அரியாலை மேற்கு சமூக நலத் திட்டத்தின் செயலாளராகவிருந்து பல சமூக சேவைகளைச்செய்து வருகின்றார்.

கல்முனையிலும் மன்னாரிலும் கடமையாற்றிய காலத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கிளைத் தலைவராக பல வருடங்கள் பதவி வகித்திருக்கின்றார். யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், தற்போதைய பழைய மாணவர் சங்கத்தின் கணக்குப் பரிசோதகராகவும் இருக்கிறார்.

அல்லல் அகன்று சாந்தி பெற

# அம்பிகை புகழ் பாடுதல் அதிமுக்கியமானது

(நயினாதீவு)

அண்டங்கள் அனைத்தையும் படைத்தவள் ஆதிபராசக்தியான அம்பிகை. அவளே இப் புவியடங்கிலுமுள்ள அனைத்து ஜீவாத்மாக்கள் அனைத்தையும் காத்தருள்பவள். அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தரும் அவளை மனமுருகி பண்ணிசைத்துத் தொழுவார்க்கு எவ்விடரும் இல்லை என்கிறார் அபிராமிப்பட்டர் எனும் நல்லடியார். அவர் அருளிய அபிராமி அந்தாதியை முறைப்படி ஓதினால் தனம், கல்வி, தளர்வறியா மனம், தெய்வ வடிவு, நெஞ்சில் வஞ்சமற்ற இனம், கனம் எல்லாம் அருளுவாள். அந்த இறைவியைப் பாடும் பணியே பெறுதற்கரிதான மானிடராய் பிறந்த எமக்குக் கிடைத்த பெரும் பணியாக வேண்டும். இப்பணியினால் நாம் எளிதில் அகிலாண்ட நாயகி தன் கடைக்கண் பார்வைக்கு ஆளாகிப் பேரின்ப வாழ்வு பெற்றுய்ய முடியும்".

நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களின் பின் சிவ போதகர் ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளின் அறிவுரையின் படி கடந்த 108 தினங்களாக அம்பிகையின் அருள் வேண்டி ஓதப் பெற்று வந்த அபிராமி அந்தாதிப் பூர்த்தி விழாவின் போது சிறப்புரை நிகழ்த்திய சைவப் புலவர் திரு நா. விசுவலிங்கம் தெரிவித்தார்.

அன்று அம்பாளுக்கு விசேட சங்காபிஷேகம் நடை பெற்று பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன. 108 நாட்களாக எவ்வித இடர்பாடும் வாராது அபிராமி அந்தாதிப் பதிகத்தைபக்தி சிரத்தையுடன் ஓதிய திரு. சி. நா[illegible] மதியாபரணம் அவர்களுக்கு ஆலய சிவாசாரியார் பாலமணிக் குருக்கள் பொன்னுடை போர்த்தி ஆசி வழங்கினார். இவ் விழாவில் திருவாளர்கள் நா. கணபதிப் பிள்ளை, என். பாலசுந்தரம், க. கனகசபாபதி (ஆலய அறங்காவலர்) அ. சண்முகநாதன் (ஆலய அறங்காவலர்) ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். விழா நிறைவில் அடியார்களுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

செய்யும் சிவாச்சாரியார்களுக்கு அமுது படைக்கப்பட்டு வருவது வழக்கம். சிலகாலம் மேற்படி தருமம் தடைப்பட்டதாயினும் தற்பொழுது தருமங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் 3 காலப் பூசைகளும், சதுர்த்தி பிள்ளையார் கதை என்பனவும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன.

✻க. ந. கங்கைவேணியன்

★ மகோற்சவகாலக் கட்டுரை

# மாவைக் கந்தன் ஆலயம் பழமை வாய்ந்த முருகதலம்

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோவில் மிகப் பழைமைவாய்ந்த முருகதலம். ஏழாம் நூற்றுண்டளவில் மாருதப்புரவீகவல்லி என்ற தமிழக அரசகுமாரியால் ஸ்தாபிக்கப்பட்ட இத்தலம், அக்காலம் தொட்டே வேதாகம நெறிமுறை தவருது பூசை ஆராதனைகள் நடைபெறும் தூய தலமாக விளங்கி வந்திருக்கிறது. இங்கு நடைபெறும் அபிடேகங்கள், ஆராதனைகள். வேத பாராயணங்கள் ஆகியவை யாவும் ஆசாரத்துடனும், பயபக்தியுடனும், பரிசுத்தமாகவும் நடைபெறுவதை இன்றும் காணலாம். சைவப் பாரம்பரியங்களைக் காத்து வளர்த்து வரும் பக்திப் பண்ணையாக இத்தலம் விளங்கி வருகிறது. கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகியுள்ள மகோற்சவங்கள், வெகு சிறப்பாகவும் சிரத்தையுடனும் இத்தலத்தில் நடைபெறுகின்றன. மகோற்சவ காலக் காட்சிகள் யாவும் வைதீக முறையில் கண்ணுக்கும் கருத்துக்கும் நிறைவு அளிக்கும் வண்ணம் இருப்பது ஓர் சிறப்பு அம்சமாகும்.

மகோற்சவங்களிலே காலையும் மாலையும் நடைபெறும் ஸ்தம்ப பூசை, எங்குமே காண முடியாத வகையில், அடியவர்களை ஈர்த்து வருகிறது இப்பூசை நடைபெறும் வேளைகளில், அங்கு வழிபாடுசெய்யும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் மத்தியிலே நிலவும் அமைதி, சாந்தம், மோனம் ஆகியவை நிரம்பிய சூழல் உள்ளத்தை உருக்கும் அற்புத நிகழ்ச்சி என்றுல் அது மிகையாகாது.

உற்சவங்கள் யாவற்றிலும் அணிபணிகளேந்திய அழகன், முத்துக்குமரன், வள்ளி தேவசேன சமேதனுக, பக்தர்கள் புடைசூழ, நாதவாத்தியங்கள் முழங்க, விருதணி மரகத மயிலேறி வீதி வலம்வரும் அற்புதக் காட்சி நெஞ்சைவிட்டு நீங்காத காட்சியாகும்.

ஐந்தாம் திருநாளன்று மாலை நடைபெறும் மாலை உற்சவத்திலும், தேர்த்திருநாளன்றும் மாவை சண்முகப் பெருமான், நவரத்தினமுடியழகும், ஒராறு திருமுகக் கருணையழகும், அருளொழுகு திருவிழிகள், ஈராறினழகும், பொன்மாலை அணிந்த மார்பழகும், டன்னிரு கரங்களில் திகழ்கின்ற ஆயுதங்களின் ஒலி அழகும், கன்னியரிருவரின் கட்டழகும் ஒருங்குசேர, முழுதும் அழகிய மூர்த்தியாக சிம்மாசனத்தமர்ந்து உட்பிரகாரம் முழுவதும், ஆடி ஆடி அசைந்து அசைந்து, நடனமாடிவரும் அற்புதத் திருவோலக்கக் காட்சியைக் காணக் கண் ஆயிரம் வேண்டும்.

இவற்றையெல்லாம் விட, இருபத்தி ஆரும் நாள் நடைபெறும் 'மாங்கனித் திருவிழா' வில் அரியதோர் மூர்த்தமாக எழுந்தருளி வீதி வலம் வரும் தண்டபாணியின் அருள் நிறைந்த காட்சி கசிவு தரும் காட்சியாகும்.

மகோற்சவ காலங்களில் கார்த்திகை உற்சவத்தன்று இத் திருத்தலத்திற்கு வரும் காவடிகளின் கூட்டம் ஆண்டு தோறும் பெருகி வருகிறது பாட்டுக்காவடி, ஆட்டக்காவடி, தூக்குக்காவடி, பாற்காவடி ஆகிய இன்னேரன்ன காவடிகள். நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அத்திருநாளன்று ஆலயத்தை வந்தடைவது ஓர் சிறந்த அம்சமாகும்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகக் கருதப்படுபவன் கந்தப்பெருமான். அவனே தமிழ் பெருங்குடி மக்களின் செந்தப்பெருமான். தேவதேவதேவாதி தேவர் பெருமானுகவும் அழகே உருவான வனுகவும், அடியார்கள் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வமாகவும் கருதப்படும் இப் பெருமான் உலகத்தைக் காத்து இரட்சிக்கும் சக்தி மிகுந்த பெருமான். நினைத்தவர் துயர் துடைக்கும் தூயவன். அப்பெருமான் சாந்நித்யம் கொண்டு அருள் வழங்கும் தலமாகிய மாவைத் திருத்தல மகோற்சவ காலத்தில் நாமும் கலந்து, எம்மை இன்று ஆருத் துயரத்தில் மூழ்கடிக்கும் அவல நிலையிலிருந்து எம்மைக்காக்க அவனை வந்தித்து வாழ்த்தி, வணங்குவோமாக.

பொன். சோமசுந்தரம்

## அகதிகளுக்கான நிவாரணத்தில் முரண்பாடு

(வேலணை)

அரச படையினரின் தாக்குதலால் தமது இருப்பிடத்தை விட்டு வெளியேறிய காவலூர், மண்டைதீவு பகுதி மக்களுக்கு ஒரு வாரத்திற்கான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. உதவி அரசாங்க அதிபர்களின் பணிப்பின் பேரில் இப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இவர்களுக்கான உணவுகளை விநியோகித்தது.

இது இவ்வாறு இருக்க மன்ஞர், வயாவிளான், கிளிநொச்சி போன்ற இடங்களில் படையினரின் தாக்குதலுக்குள்ளாகியும், அவர்களது தாக்குதலுக்கு அஞ்சியும் வீடு சொத்து மற்றும் உடைமைகளை இழந்தும் வெளியேறி வேலணைப்பகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை முற்றுகையிடும் இடம்பெயர்ந்தோர் வெறும் கையுடன் ஏமாற்றத்துடன் திரும்புகின்ருர்கள். அந்தப் பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டும் தான் நிவாரணம் அரசால் வழங்கப்படுகின்றது.

ஆனுல் மேற்படி பகுதி மக்களும் இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களாகையால் இவர்களுக்கும் அரசால் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் எந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் சென்று தஞ்சம் அடைகின்ருர்களோ அவர்களும் அந்த அரசங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவராகக் கணிக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## உற்சவம்

(குருநகர்)

குருநகர், பரிசுத்த கார்மேல் அன்னையின் வருடாந்த உற்சவம் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நடைபெற்றுவருகிறது. தினமும் மாலை 5.45 மணிக்கு செபமாலையுடன் தொடங்கி 6 15 மணிக்கு பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

15ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணிக்கு பலிப்பூசையுடன் நற்கருணை ஆராதனையும், சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். 16ம் திகதி புதன்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதுடன் 8 மணிக்கு திருச்சொரூப பவனியும், ஆசீர்வாதமும் நடைபெற்றுத் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறும்.

பாரத வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

ஆதாரங்கள் பாகிஸ்தானுக்கு தெரிவிப்பு

# பஞ்சாப்பின் நிலைமைக்கு பாகிஸ்தானே காரணம்

(புதுடில்லி)

பஞ்சாப்பில் இடம் பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தானே ஆதரவும் உதவிகளும் அளித்து வருவதாக ஆதார பூர்வமாக தெரியவந்துள்ளது என்றும், அது பற்றி பாகிஸ்தானுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாரத வெளியுறவு அமைச்சர் திரு. பி. சிவ்சங்கர் நேற்று தமது அமைச்சக பாராளுமன்ற குழு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இந்திய பாகிஸ்தான் எல்லையில் பஞ்சாப் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற போது இந்திய எல்லைக்காவல் படையினரால் கைது செய்யப்பட்டதையும், அத்தீவிரவாதிகளிடமிருந்து பெறப்பட்ட சில தகவல்களையும் இதற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டினுர்.

இதனுல் பாகிஸ்தானே இவர்களுக்கு ஆயுதம் மற்றும் உதவிகளை வழங்கிவருவது ஊர்ஜிதமாகியுள்ளது என்றும் அவர் சொன்னுர்.

இதுபற்றி பாகிஸ்தானுக்கு ஏற்கனவே பல தடவைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், கனடாவில் உள்ள சீக்கிய தீவிரவாதிகள் பற்றி கனடா அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாகவும், ஆனுல் பிரிட்டன் இது விடயத்தில் மௌனம் சாதிப்பது பாரதத்துக்கு மிகுந்த கவலையளிப்பதாகவும் கூறினுர்.

பிரி- மந்திரியின் விஜயம்

## ஸிம்பாப்வே பிரதம மந்திரி வன்மையான கண்டனம்

(லுவாண்டா)

ஆபிரிக்க நாடுகளுக்கு பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜெப்ரி ஹோ மேற்கொண்டுள்ள விஜயத்தை ஸிம்பாப்வே பிரதம மந்திரி திரு றெபேட் முகாபே வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவரது விஜயம் வியர்த்தம் என்று திரு. முகாபே வர்ணித்தார்.

தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத்தடை விதித்தால் அது ஆபிரிக்க நாடுகளையே பாதிக்கும் என்ற பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரின் கூற்றை திரு. முகாபே நிராகரித்தார்.

## தென்னுபிரிக்கா: எதிர்ப்பு வலுக்கிறது

(லண்டன்)

இன ஒதுக்கல் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடும் தென்னுபிரிக்கா மீது உடனடியாகப் பொருளாதாரத் தடை கொண்டுவரப்பட வேண்டுமென ஐரோப்பியப் பாராளுமன்றம் வற்புறுத்தியுள்ளது.

இந்த வகையில் இதன் 12 உறுப்பு நாடுகளும் வற்புறுத்தப்பட்டுள்ளன.

தென்னுபிரிக்காவுடனுன புதிய முதலீடுகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் நிலக்கரி, தங்கம் முதலானவை அங்கிருந்து இறக்குமதி செய்யப்படக்கூடாதென்றும் மேலும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## 10 பேர் சுட்டுக்கொலை

(ஜொகனஸ்பேர்க்)

தென்னுபிரிக்காவில் இடம்பெற்ற வன்முறைகளில் ஆயுதப்படையினர் சுட்டதில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர் 10 பேர் பலியானுர்கள். குண்டு வெடிப்பு சம்பவமும் இடம்பெற்றது.

## மெய்வல்லுநர் போட்டி

(சங்கானை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பல வருடங்களின் பின்னர் அதிபர் திரு. இ. கருணநிதி தலைமையில் கண்ணகி அம்மன் ஆலய வீதியில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஒலிம்பிக் தீபமேற்றல் நிகழ்ச்சி தொடக்கம் கயிறிழுத்தல் வரை மிகவும் உற்சாகத்துடன் மாணவர்கள் பங்குபற்றியமையும் பலரது கவனத்தை ஈர்த்தது.

பாடசாலைக்கு அண்மையில் மைதான வசதி இல்லாமையால் மேலும் உரிய விளையாட்டு பயிற்சிகள் அளிக்க முடியவில்லை என விளையாட்டுச் செயற்குழுவினர் கவலை தெரிவிக்கின்ருர்கள்.

## ஊக்கம் உற்சாகம் தேவை

(சங்கானை)

"இன்றைய கால கட்டத்தில் மாணவர்களின் வளர்ச்சியில் பெற்றேர்களின் கவனிப்பும், ஊக்கமும், பாடசாலைகளின் நடைமுறைகளை அவதானிக்கும் மனநிலையும், அவசியம். இளைய தமிழ் மாணவ சமூகத்தின் கல்வி வளர்ச்சிகளில் கூடிய கண்காணிப்பும் தேவையானதே" என்று வட-மாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வலியுறுத்திக் கூறினுர்.

சித்தங்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் முன்னுள் கல்லூரி அதிபர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் பேசினுர்.

இப்படியான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் சகல தொகுதிகளிலும் வருடத்தில் இரண்டு தடவைகள் நடைமுறையில் அமைய வேண்டும் எனவும், பல பிரச்சினைகளை நேரில் அறிய நல்ல வாய்ப்பு எனவும் வட-மாநில கல்விப்பணிப்பாளர் மேலும் கூறினுர்.

## ஒன்றுபட்டு ஆக்க முயற்சியில் ஈடுபடுதல் அவசியமானது

(சரசாலை)

"தமிழ் மக்களின் எதிர்காலத்தை நசுக்குவதற்கு, தமிழ் மாணவர்களது கல்வியைப் பாழாக்குவதற்கு பலவித முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. இதனை முறியடிக்க ஒற்றுமையாக ஒன்றுபட்டு நாம் ஆக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளின் மாணவ தலைவர்களின் ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நல் இணக்கச் சபை பிரமுகரும், முன்னுள் அதிபருமான திரு. பூ. வெற்றிவேலு குறிப்பிட்டார்.

இந்துக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி கல்லூரி மாணவ மன்றத் தலைவர் செல்வன் என். பவானந்தன் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி வைபவத்தில் சாவகச்சேரி வட்டாரக் கல்வியதிகாரி திரு. அ. தங்கராசா உரையாற்றுகையில், "இக்கல்லூரி மாணவர்கள் வடபகுதியில் முன்னணியில் திகழ்கின்றனர். அதுமட்டுமல்ல இலங்கையில் சகல பாகங்களிலும், வெளிநாடுகளிலும் நல்ல நிலையில் இருக்கின்றனர். இதன் மூலம் இக்கல்லூரிக்கு மிகப் பெருமையாகும். இக்கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி போதிப்பதை எடுத்துக் காட்டுகின்றது" என்ருர்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன், டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன், இந்துக் கல்லூரி விரிவுரையாளரும் ஒழுக்காற்று சபை பிரமுகருமான திரு. க. சந்திரசேகரம், இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. அருணசலம் ஆகியோரும் உரையாற்றினர்.

## கைதடியில் அகதிகள் தஞ்சம்

(சாவகச்சேரி)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியிலிருந்து முப்பத்து ஐந்து குடும்பங்களைக் கொண்ட நூற்று இருபத்து எட்டுப் பேர் அகதிகளாக கைதடிப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் தமது வீடுவாசல், பொருள்பண்டம் சகலதையும் இழந்து வந்துள்ளமையினுல் அறவழிப் போராட்டக் குழு அவர்களுக்குக் கைகொடுத்து ஆதரித்து வருகிறது.

கைதடியிலுள்ள முன்னுள் மகாவித்தியாலய கட்டடத்தில் அந்த அகதிகளைத் தற்காலிகமாகக் குடியிருத்தி, அவர்களுக்கான உணவு, உடை வசதிகளை அறவழிப் போராட்டக் குழுவே கவனித்து வருகிறது

13-7-86 ஞாயிற்றுக்கிழமை

ஈழமுரசு
THE EELAMURASU

## மட்டக்களப்பு தாண்டியடிப் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர் கைது

மட்டக்களப்பிலுள்ள தாண்டியடி கிராமம் நேற்று முன்தினம் இரவு முதல் கொமாண்டோ பொலிஸாரினாலும், ராணுவத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது இங்கிருந்து சுமார் நூறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. திருக்கோவிலிலிருந்து சென்ற கொமாண்டோப் பொலிஸாரும், கோமாரியிலிருந்து சென்ற ராணுவத்தினருமே இக்கிராமத்தைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதாகத் தெரியவந்துள்ளது. இதற்காகப் பெருமளவு கொமாண்டோக்களும் ராணுவத்தினரும் வாகனங்களில் இங்கு சென்றிருந்தார்கள்.

புதியவர்களும் வந்துள்ளனர்

# வல்வை முகாம் பலமடைகிறது!

(வல்வெட்டித்துறை)

**வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு, மேலும் இராணுவத்தினர் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். சுமார் நூறு இராணுவத்தினர் வரை இறக்கப்பட்டதை இங்கு காணக்கூடியதாக இருந்தது.**

நேற்றுக்காலை சுமார் எட்டரை மணியளவில் காங்கேசன்துறைப் பக்கமாக இருந்து வந்த பெரிய பீரங்கிக் கடற்படைக் கப்பல் வல்வை இராணுவ முகாமுக்கு நேராக வந்து தரித்தது. அதிலிருந்து இறக்கப்பட்ட சிறிய படகில் இராணுவத்தினர் இறக்கப்பட்டனர்

சிறிய படகு வல்வை இராணுவ முகாம் கரையில் இராணுவத்தினரை இறக்கியது. அதேநேரம் முகாமிலிருந்தும் இராணுவத்தினர் படகில் ஏறி உயர நின்ற கப்பலில் ஏறியதையும் காணமுடிந்தது.

சுமார் நூறு இராணுவத்தினர் வரை இறக்கிவிடப்பட்டதாகவும், அதேநேரம் முகாமிலிருந்த பழையவர்களும் ஏற்றிச்செல்லப்பட்டதாகவும் பேசப்படுகிறது.

புதியவர்கள் வந்திறங்கிய சிறிது நேரத்தில் முகாமிலிருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுகள் கடலைநோக்கி சுடப்பட்டன. கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தமது கலங்களுடன் கரைக்கு விரைந்து வந்துசேர்ந்தனர்.

இத் துப்பாக்கிச் சத்தங்களிடையே பீரங்கிப்படகும் உயரமாக சென்று மேற்கு நோக்கி விரைந்தது.

புதிய இராணுவத்தினர் இறக்கிவிடப்பட்ட அதேவேளை பழையவர் சிலரும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் எனப் பேசப்படுகிறது.

பலமாதகாலம் இடமாற்றம் செய்யப்படாமலுள்ள இராணுவத்தினர் சிலருக்கும், முகாம் பெரியவர்களுக்கும் இடையே உள் பூசல், குமுறல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு சில தொடர்புச் சாதனங்கள் மூலமாக அறிய முடிந்ததாகத் தெரியவருகிறது.

## ஒக்ஸிஜன் சிலிண்டர்கள் கப்பலில் அனுப்பப்பட்டன

யாழ். அரசினர் வைத்தியசாலையில் தேங்கியிருந்த பல ஒக்ஸிஜன் வெற்றுச் சிலிண்டர்கள் கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது கொழும்பு - யாழ். போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளதினாலும், 'பாதுகாப்பு' கெடுபிடிகளினாலும் வெற்றுச் சிலிண்டர்களை கொழும்புக்கு அனுப்புவதில் வைத்தியசாலை நிர்வாகம் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதனால் கொழும்பிலிருந்து ஒக்ஸிஜன் நிரப்பப்பட்ட சிலிண்டர்களை வரவழைக்க முடியாதிருந்தது. இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகம் எடுத்தமுயற்சியின் பயனாக வெற்றுச் சிலிண்டர்களை கப்பலில் கொழும்பிற்கு அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

### அமிர் தலைமை ..

கிக்கொண்டார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் தமது கணவருடன் கொழும்பு வந்துள்ளார்.

இவர்கள் சுமார் ஆறுதினங்கள் கொழும்பில் தங்கியிருக்கக்கூடும். குழுவினர் தங்கியிருக்கும் ஹோட்டல் எம்பிரஸுக்கு பலமான பாதுகாப்பு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

### திறந்த ...

றம் காணப்படுவதாக'' திரு. சிவசிதம்பரம் ''ஆல் இன்டியா ரேடியோ'' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதனை அடிப்படையாக வைத்து பேச்சு வார்த்தைகளைத் தொடர முடியுமா என்றே தமது கட்சி ஆராய்ந்து வருவதாகவும் திரு. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகலட்சுமி துரைசாமி

மயிலிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் K.V. துரைசாமி, J. P. அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கோகிலகுமாரி யோகானந்தம், ரஞ்சன், ரவிச்சந்திரன் (நெதர்லாந்து), சக்தி கிருஷ்ணன் B.A. (Cey), திருமதி வானதி ஸ்கந்தராசா B. A., ஸ்ரீகரன் H.I.E.T. (இந்தியா), ஸ்ரீவத்சன் H.I.E.T. (இந்தியா), ஸ்ரீசிவசக்தி (யூனியன் கல்லூரி), ஸ்ரீதேவி (யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் R. யோகானந்தம் LLB, S ஸ்கந்தராசா, B.Sc (U K), Mrs. நிர்மலா ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), Dr. K. நடேசலிங்கம் MRCP, (UK), திருமதி செல்வி மகாலிங்கம் (சவூதி), இந்திரலிங்கம் (சவூதி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-7-86) ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணியளவில் மயிலிட்டியில் நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K. V. துரைசாமி
மயிலிட்டி.

R/24043

## போராளிக்கு அஞ்சலி

பருத்தித்துறையில் வீரமரணமான புலிகள் இயக்கப் போராளியான அரியாலை, த. ரதீஸ்வரனின் (தோமஸ்) பூதவுடல் நேற்றுக் காலை துண்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. மயானத்தில் அஞ்சலி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது வீட்டில் இருந்து கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதி, கனகரட்ணம் வீதி, கண்டி வீதி, ஆனந்தன் வடலி வீதியாகப் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பெருந்தொகையானோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். வீதிகளில் வாழை, தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. மயானத்தில் பெண்களும் காணப்பட்டனர்.

## ஆனி உத்தரம்

கலட்டி ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் ஆலய ஆனி உத்தர திருவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும். விசேட அபிஷேக ஆராதனைகளும் திருவூஞ்சலும் இடம்பெறும்.

### மாகாண சபையை...

மாகாணசபை யோசனையைக் கண்டித்து இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றி கருத்து வெளியிட அமிர்தலிங்கம் மறுத்துவிட்டார்.

கூட்டணிக்குழுவினர் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்வது பற்றியும் அவர் திட்டவட்டமாக எதனையும் குறிப்பிடவில்லை.

### இயக்கச்சியில் ...

ருந்த பரமேஸ்வரன் காயமடைந்த குழந்தையையும் தூக்கிக்கொண்டு பாதுகாப்பிற்காக பற்றைக்குள் உருண்டு செல்லும்போது அவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அவர் இப்போது யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த இருவர் நேற்றுவரை பற்றைக்குள்ளேயே கிடந்ததாகவும், பின்னர் அயலவர்களால் இருவரும் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. இறந்த இருவரும் கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வந்த ட்ராக்டரும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

## மன்னார் கடலில் தாக்குதல்; படகு முற்றாக எரிந்தது!

நேற்று முன்தினம் மாலை மன்னார் கடலில் வந்துகொண்டிருந்த படகு ஒன்றின் மீது ஹெலிகாப்டரிலிருந்தும், பீரங்கிப் படகு ஒன்றிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் பிரஸ்தாப படகு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மன்னார் விடத்தல்தீவிலிருந்து கடலுக்குள் சுமார் இரண்டு மைல் தொலைவிலேயே இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

இப்படகில் இருந்தவர்கள் யார் என்பது பற்றியோ எத்தனை பேர் இதில் இருந்தார்கள் என்பது பற்றியோ சரியான தகவல் எதனையும் பெறமுடியவில்லை.

குமார் அறிக்கை:

## நானோ எனது கட்சியோ போராட்டத்துக்கு எதிரல்ல!

''தமிழ்பேசும் இனம் சுதந்திரமாகவும் சுயமரியாதையுடனும் சுபீட்சமாகவும் வாழ வேண்டும் என்ற எங்கள் கட்சியின் லட்சியத்தை மாகாண சபை பற்றிய திட்டமானது எந்த வகையிலும் நிறைவு செய்யவில்லை என்பதை மீண்டும் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்துவதோடு அரசியல் கட்சிகள் மகாநாடு நடைபெற்ற அன்றே அரசின் மாகாண சபைத் திட்டம் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவித்திருந்தேன் என்பதை ஈழமுரசு வாயிலாகவும், ஏனைய பத்திரிகைகள் மூலமும் தமிழ் மக்கள் அறிந்திருப்பார்கள்''.

இவ்வாறு தமிழ் காங்கிரஸ் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக என்மீது வேண்டுமென்றே அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் ''தமிழ்பேசும் மக்கள்'' என்ற பெயரில் விடுக்கப்பட்டதாக நேற்று வெளிவந்த செய்தியை வன்மையாக கண்டிப்பதோடு அது உண்மைக்கு புறம்பானதாகும் என்று தமிழ் பேசும் மக்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

நானோ எனது கட்சியோ என்றும் தமிழ் தேசிய இனத்தின் ஒரு தலைப் போராட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை தமிழ் தேசிய இனம் நன்கு அறியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டுநகருக்கு 15-ம் திகதி விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாண பகுதியில் இருந்து போகமுடியாத மட்டக்களப்பு பகுதியில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் நலனை முன்னிட்டு 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஒரு விசேட பஸ் சேவை யாழ். பஸ் நிலையத்தில் இருந்து நடைபெறவுள்ளது.

இவ்வாறு இங்குள்ள இந்த அரச ஊழியர்கள் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்ததையடுத்து இச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முப்பத்துமூன்று பேர் இதுவரை பணம் செலுத்தி தமது பயணத்தை பதிவு செய்துகொண்டனர்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்ய விரும்பும் அரச ஊழியர்கள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பஸ் நிலைய அலுவலகத்தில் திரு. எஸ். ஸ்ரீதரன் அல்லது திரு. சீ பிரகாஷ் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பல தடை முகாம்களைத் தாண்டி பஸ் நேரத்துடன் மட்டுநகர் செல்லவேண்டியதால் செவ்வாய்க்கிழமை மூன்றரை மணிக்கு பயணம் செய்வோர் யாழ். பஸ் நிலையம் வருமாறும் கேட்கப்படுகின்றனர். இந்த பஸ் மீண்டும் மட்டுநகரில் இருந்து புதன்கிழமை புறப்பட்டு யாழ்ப்பாணம் வரவுள்ளதால் அங்கிருந்து வருபவர்கள் மட்டுநகர் போக்குவரத்துச்சபை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம்.

## வீரமணி அமெரிக்காவில்

(சென்னை)

திராவிடக் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி அமெரிக்காவில்உள்ள ஈழத்தமிழர்அமைப்புக்களின் அழைப்பை ஏற்று நேற்று அங்கு பயணமானார். சுமார் ஒருவாரம் அங்கு தங்கியிருக்கும் அவர், ஈழத் தமிழர் அமைப்பு நிகழ்ச்சிகளில் கலந்து உரையாற்றுவார்.

## வங்கிக்கிளை இடமாற்றம்

(வல்வெட்டித்துறை)

தற்காலிகமாக உடுப்பிட்டி பலநோக்கக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தில் இயங்கிவந்த வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளை, வல்வெட்டியில், பழைய பொலிஸ் நிலையத்தின்முன்பாக றோட்டின் மேற்கிலுள்ள கட்டடத்தில் நாளை திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளது.

## நாளை கும்பாபிஷேகம்

முளங்காவில் ஸ்ரீ செல்வ யோக சித்திவிநாயகர்கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது கிரியாகால நிகழ்ச்சிகள் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 13-07-86 ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487